# 7 விவேக சிந்தாமணி

இந்நூல் எந்தக் காலத்திற்கு உரியது, யாரால் பாடப்பட்டது என்பது தொடர்பான தகவல்கள் கிடைக்கவில்லை. நாயக்கர் காலத்திற்குரிய சிற்றிலக்கியம் என்றும் கூறுவர். நீதிக்கருத்துக்கள், சிருங்காரச் சுவை நிரம்பிய பாடல்களை உள்ளடக்கிய இவ்விலக்கியம், தனிப்பாடல்களின் தொகுப்பு என்ற கருத்தும் நிலவுகின்றது.



இப்பாடல்கள் பெண்ணின் அழகை நாகரிகமான முறையில் விபரிக்கின்றன. கவிஞனின் சொல்லாட்சியும் கற்பனையும் இரசித்து இன்புறத்தக்கன

## வந்தது வான்உறு மதியமோ!

அ. தேன்நுகர் வண்டு மதுதனை உண்டு
தியங்கியே கிடந்ததைக் கண்டு
தான்அதைச் சம்பு வின்கனி என்று
தடங்கையில் எடுத்துமுன் பார்த்தாள்;
வான்உறு மதியம் வந்ததுஎன்று எண்ணி
மலர்க்கரம் குவியுமென்று அஞ்சிப்
போனது வண்டோ பறந்ததோ பழந்தான்
புதுமையோ இது எனப் புகன்றாள்.

### பொருள்

*தேனை உண்ணும் இயல்புடைய வண்டுகள் மலர்களில் உள்ள தேனையுண்டு மயங்கிக் கிடந்தன. அவற்றைக் கண்டாள் ஒரு மங்கை. அவற்றை நாவல் பழங்கள் என நினைத்து அவற்றுள் ஒன்றைத் தன் பெரிய கையில் எடுத்துப் பார்த்தாள். அப்போது அந்த வண்டு அவளது முக அழகால் வானத்தில் உலாவும் சந்திரன் வந்தது என எண்ணி, (அவளது) கையான தாமரை மலர் குவிந்துவிடும் என அஞ்சிப் பறந்து போய்விட்டது. பின்னர் அவள் பறந்து போனது வண்டோ, அன்றிப் பழமோ வேறு என்ன புதுமையோ எனச் சொன்னாள்.*

### அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| நுகர் (தல்) | - | *உண்(ணு)* |
| மது | - | *கள் / தேன்* |
| தியங்கி | - | *மயங்கி* |
| தடங்கை | - | *அகன்ற கை* |
| வான் | - | *வானம்* |
| மதியம் | - | *நிலவு* |
| புகன்றாள் | - | *சொன்னாள்* |

### பொருளுணர் திறன் செயற்பாடு

1. *கவிஞனின் கற்பனையாற்றலை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.*

2. *இச் செய்யுளில் இடம்பெறும் உருவக அணியைக் குறிப்பிட்டு அதன் சிறப்பினை விளக்குக.*



**கண்டது கெண்டையோ!**

ஆ. தண்டு உலாவிய தாமரைப் பொய்கையில்
மொண்டு நீரை முகத்தருகு ஏந்தினாள்;
'கெண்டை' 'கெண்டை' யெ னக்கரை ஏறினாள்;
கெண்டை காண்கிலள் நின்று தயங்கினாள்.

### பொருள்

*ஒருத்தி கொடிகளை யுடைய தாமரைப் பொய்கையில் உள்ள தண்ணீரைக் கையால் முகந்து தன் முகத்தருகே ஏந்திப் பார்த்தாள். அதில் தெரிந்த தன் நிழலைப் பார்த்து 'கெண்டை மீன், கெண்டை மீன்!' எனக் கூவிக் கொண்டே (நீரைக் கீழே விட்டுத்) தரையில் ஏறிப் பார்த்தபோது அக்கெண்டை மீனைக் காணாமல் நின்று மயங்கினாள்.*

#### அரும்பதங்கள்

பொய்கை - *நீர்த்தடாகம்*
மொண்டு - *அள்ளி*
கெண்டை - *ஒரு வகை மீன்*

#### பொருளுணர் திறன் செயற்பாடு

1. *நீரில் தலைவி கண்ட காட்சி யாது?*
2. *கண்களின் அழகினை கவிஞர் விபரிக்குமாற்றிலுள்ள நயத்தினை விளக்குக.*

## கலகமே செய்யும் கண் இதுவாம்



இ. அலகு வாள்விழி ஆயிழை நன்னுதல்
திலகம் கண்டுஎதிர் செஞ்சிலை மாரனும்
கலக மேசெயும் கண்இது வாம்என
மலரம்பு ஐந்தையும் வைத்து வணங்கினான்.

### பொருள்

வாள் போன்ற கண்களையுடைய எம் கன்னியின் நல்ல நெற்றியில் உள்ள பொட்டினது அழகைக் கரும்பு வில்லையுடைய மன்மதன் பார்த்தான். இவளுடைய கண் கலகம் விளைவிப்பதோ என்று எண்ணித் தன் கையில் உள்ள மலர் அம்புகள் ஐந்தையும் அவள் முன்னர் வைத்து வணங்கினான்.

### பொருளுணர் திறன் செயற்பாடு

1. இப்பாடலில் இடம்பெறும் உவமை அணியின் சிறப்பினை விளக்குக.
2. மலர் அம்பு ஐந்தையும் வைத்து வணங்கினான் என்ற அடிகளின் பொருத்தப் பாட்டினை விளக்குக.

### குழுமச் செயற்பாடு

**“தேனுகர் வண்டு”** என்ற பாடலை அடிப்படையாகக் கொண்டு (50 சொற்களுக்குக் குறையாமல்) நயவுரை எழுதுவோம்.

### திறன் வளர் செயற்பாடு

பெண்களின் அழகை இலக்கியச்சுவையோடும், நாகரிகமாகவும் விபரிக்கும் பாடல்களைத் திரட்டி எழுதி அவற்றின் சிறப்புக்கள் பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுவோம்.